IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP No.34/2022

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 19.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | கிருஷ்ணமூர்த்தி | **Caste** | : | |
| **S/o.** | **:** | ஆண்டி | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரரின் 1ஆம் சாட்சி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | TN 28–AB–9514 (ASHOK LEYLAND LORRY)ன் பாலிசி | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | – | TN 36–AE–8668 என்ற மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | – | இறந்து போன பால்ராஜின் விபத்து பதிவேடு | நகல் |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றாலும் கோப்புகளின் அடிப்படையில்தான் எனக்கு விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஒரு விபத்து நடந்தவுடன் வாகன உரிமையாளர் எங்கள் நிறுவனத்திற்கு வாகன ஆவணங்களை வைத்து கிளைம் பார்ம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஆனால் இந்த வாகன உரிமையாளர் எதுவும் கொடுகக்வில்லை. விபத்தை நான் நேரில் சென்று ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. விபத்து நடந்தது குறித்து மாதிரி

வரைபடம் ம.சா.ஆ.6 ஆவணத்தில் லாரி வந்த திசையில் இருந்து வலதுபுறம் தான் விபத்து நடந்ததாக உள்ளது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ 2 ஆவணம் எங்கிருந்து பெறப்பட்டது என்பதற்கான குறிப்பு இல்லை என்றால் அது எங்களுடைய தனிப்பட்ட புலன்ஆய்வாளர் மூலம் பெறப்பட்டது. ஒரு வாகனத்திற்கு பர்மிட் கொடுக்கும்போது மேற்படி வாகனம் முழுமையாக தகுதி வாய்ந்த வாகனம் என்றால்தான் மேற்படி பர்மிட் கொடுக்கப்படும் என்றால் அது மோட்டார் வாகன ஆய்வாளருக்கு தான் தெரியும். எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யும்போது மேற்படி வாகனத்தின் பதிவு சான்று, தகுதி சான்று கொடுத்தால்தான் காப்பீடு செய்யப்படும் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதை நாங்கள் உண்மை என்று சொல்கிறோம் என்றால் சரியல்ல. லாரி போக்குவரத்து விதிகளை மதிக்காமல் கண்கூசச்செய்யும் விளக்கினை எரியவிட்டு நடுரோட்டில் சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றும் மேற்படி லாரிக்கு பகரப் பொறுப்பாளர் என்ற அடிப்படையில் சமூகம் கோர்ட்டார் நிர்ணயிக்கும் இழப்பீட்டை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. அதனால் நியாயமான இழப்பீட்டைசெலுத்த தவிர்க்கவேண்டி இம்மாதிரியான வாதத்தை முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் 24 வயது நபர், அவர்தான் குடும்பத்திற்கு சம்பாதிக்கும் நபர் என்றும் அதனால் அவருடைய பெற்றோர்கள் கேட்கும் இழப்பீடு நியாயமான இழப்பீடு என்றும் அந்த இழப்பீட்டைசெலுத்த தவிர்க்கவேண்டி இம்மாதிரியான வாதத்தை முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் முறையாக தலைகவசம் அணிந்து சென்று தான் வாகனத்தில் சென்றுள்ளார் என்றும் விபத்தின் போது மேற்படி தலைகவசம் நழுவி சென்றதால் போலிசார் தவறான சங்கதிகளை சொல்லியுள்ளார்கள் என்றும் எனவே நாங்கள் மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டை செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

ஒம்/–கிருஷ்ணமூர்த்தி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/– R. சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.